மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 95/2020

பெயர் : ராஜேந்திரன்
சாட்சி – வா.சா–2 நாள்:04.08.2025

---

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

1. நான் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். நான் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தொட்டம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். வாதி ராதாகிருஷ்ணன் எனது அத்தை மகன் ஆவார். வாதி ராதாகிருஷ்ணன் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளார். வாதி குடியிருக்கும் இடம் வி.கள்ளிப்பாளையம் கிராமம் என்றால் சரிதான். தொட்டம்பட்டி கிராமத்திற்கும் கள்ளிப்பாளையம் கிராமத்திற்கும் இடையே 10 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான்.

2. நான் வாதியின் உறவினர் என்ற வகையில் வாதி குடும்பத்தை பற்றி எனக்கு சிறுவயதில் இருந்தே தெரியும் என்றால் சரிதான். வாதியின் தாயாருக்கும், கோவிந்தசாமிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தசாமி உடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் விஸ்வநாதன், பெரியசாமி, சந்திரசேகர் ஆகிய மூன்று சகோதரர்கள் மற்றும் பாலாமணி என்ற ஒரு சகோதரியும் ஆவார்கள். தற்போது பெரியசாமி மற்றும் சந்திரசேகர் ஆகியோர் இறந்து விட்டார்கள். விஸ்வநாதன் மற்றும் பாலாமணி ஆகியோர் மட்டும் தான் உயிருடன் உள்ளார்கள்.

3. வாதி ராதாகிருஷ்ணனுக்கு தொட்டம்பட்டி கிராமத்தில் உள்ள சுப்பராய கவுண்டர் தாய்மாமன் என்றால் சரியல்ல ஒன்றுவிட்ட மாமன் ஆவார். ராதாகிருஷ்ணனுக்கு தாய்மாமன் உள்ளாரா என்றால் அவர் இறந்து விட்டார் அவர் பெயர் வேணுகோபால கிருஷ்ணசாமி ஆகும். கோவிந்தசாமியின் தந்தை பெயர் அவினாசி கவுண்டர் என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு திருமணமானதிலிருந்து

பருவதம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. திருமணமான காலத்திலிருந்து பர்வதம்மாளுக்கு மனநிலை சரியில்லாமல் அவர் கீழ்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல.

4. வாதி ராதாகிருஷ்ணன் மனநிலை பாதிக்கப்பட்டு சிறு வயதில் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் 3 மாதங்கள் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல. வாதி ராதாகிருஷ்ணனின் தாய் மாமன் ஆன சுப்பராய கவுண்டர் என்பவர் 08.04.1980 தேதியில் 1ம் பிரதிவாதியை கோவிந்தசாமிக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை கோவிந்தசாமி திருமணம் செய்து கொண்ட சமயத்தில் வாதி இளவராக இருந்தார் என்றும் அவருக்கும் மேற்படி விபரம் நன்கு தெரியும் என்றும், சொன்னால் அவர் இளவராக இருந்திருக்கலாம் அவருக்கு அந்த விவரம் தெரியுமா என்று எனக்கு தெரியாது.

5. 08.04.1980 தேதியில் வாதியும் வாதியின் தகப்பனாரும் அவர்களது பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்லி உள்ளது சம்பந்தமான பாகப்பிரிவினை ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியும். வாதியின் தகப்பனார் அவரது பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு அவரது பெயரில் 29.04.1982 தேதியில் சொத்தை கிரயம் பெற்றார் என்பதற்கு, கூட்டு குடும்ப பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தில் தான் வாங்கப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு வாதி தரப்பில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி ஜே.கே.ஜே காலனியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி ஜே.கே.ஜே காலனியில் தான் வாதியின் தகப்பனார் கோவிந்தசாமி 1ம் பிரதிவாதியுடன் மனைவி என்ற நிலையில் குடும்பமாக வசித்து வந்தார் என்றால் அவர் கள்ளிப்பாளையம் கிராமத்திலும், ஜே.கே.ஜே காலணியிலும் வசித்து வந்தார். கள்ளிப்பாளையம் கிராமத்திலும், ஜே.கே.ஜே காலணியிலும் வசித்து வந்தார் என்பதை எனது நிரூபன வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. 1980 ஆம் ஆண்டு 1ம் பிரதிவாதியை கோவிந்தசாமி திருமணம் செய்து கொண்ட பின்னர், மேற்படி கோவிந்தசாமி, பருவதம்மாள், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி

ஆகியோருடன் கள்ளிப்பாளையம் கிராமத்தில் ஒரு வருடம் கூட்டு குடும்பமாக குடும்பம் நடத்தினார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கள்ளிப்பாளையம் கிராமத்தில் ஒரு வருடம் கூட்டுக் குடும்பம் நடத்திய விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், வாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவ்வாறு இல்லை என்று நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

8. கோவிந்தசாமி உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது 1ம் பிரதிவாதி தான் அவரை கோயம்புத்தூர் அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தார் என்றால் இல்லை. 1981 ஆம் ஆண்டிலிருந்து அவர் இறக்கும் வரை 1ம் பிரதிவாதி தான் கோவிந்தசாமியை பார்த்துக்கொண்டு அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது சிகிச்சை அளித்தார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 கோவிந்தசாமியின் இறப்பு சான்றிதழில், மனைவி பெயர் நிர்மலா தேவி என்றும், இறந்த முகவரி 89, ஜே.கே.ஜே காலனி என்றும் உள்ளது என்றால் சரிதான். இறந்து போன கோவிந்தசாமிக்கு அடையாள ஆவணங்கள் அனைத்தும் மேற்படி ஜே.கே.ஜே காலனி முகவரியில் தான் உள்ளன என்றால் சரிதான். அவர் இறந்து போனதும் ஜே கே ஜே காலனியில் தான் என்றால் சரிதான். ஜே.கே.ஜே காலனியில் தான் நான் அவரது இறுதி சடங்கிலும் பங்கேற்றேன் என்றால் சரிதான்.

9. கோவிந்தசாமியின் சடலம் ஏரியூட்டப்பட்டதற்கான ரசீதில் மனைவி என்று 1ம் பிரதிவாதியின் பெயர்தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கோவிந்தசாமியின் மனைவி என்று பொய்யாக சொல்லி இறப்பு சான்றிதழ் வாங்கியதற்காக காவல் நிலையத்தில் நாங்கள் ஏதும் புகார் அளித்தோமா என்றால் காவல் நிலையம் செல்லவில்லை நேரடியாக வழக்கறிஞர் அலுவலகம் வந்துவிட்டோம். கோவிந்தசாமி தனது மனைவி என்று 1ம் பிரதிவாதியை குறிப்பிட்டு வங்கி சேமிப்பு கணக்கு தொடங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. 04.12.1992 தேதியில் கோவிந்தசாமி 1ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும், வாதி எனது உறவினர் என்பதால் நான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தாய் மாமாவான சுப்பராய கவுண்டர் முன்னிலையில், வாதியின் தந்தையின் சகோதரர் விஸ்வநாதன், சந்திரசேகர் முன்னிலையில் கோவிந்தசாமிக்கும் 1ம்

பிரதிவாதிக்கும் பழனி தண்டாயுதபாணி கோவிலில் திருமணம் நடைபெற்றுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி திருமணம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் நான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

11. கோவிந்தசாமி ஜே.கே.ஜி காலனியில் வசித்து வந்த விவரம் எப்போதிலிருந்து எனக்கு தெரியும் என்றால் எனக்கு நினைவில் இல்லை. அவர் இறக்கும் வரை தெரியும். கோவிந்தசாமி ஜே கே ஜே காலனியில் இருந்த போது நான் அங்கு சென்று வந்தேன் என்றால் சரிதான். நான் ஒரு 4, 5 முறை சென்று வந்திருப்பேன். நான் சென்று வந்த போது 1ம் பிரதிவாதி அங்கு தான் இருந்தார் என்றால் சரியல்ல.

12. அரசு அதிகாரிகள் விசாரித்து ஆவணங்களை பரிசீலனை செய்து, உண்மை என்று தெரிந்த பின்னர் தான் கோவிந்தசாமியின் இறப்புச் சான்றிதழை மனைவி என்று 1ம் பிரதிவாதியின் பெயரை குறிப்பிட்டு வழங்கி உள்ளார்கள் என்றால் சரியல்ல. இறப்புச் சான்றிதழ் வழங்கிய பின்னர் அது சம்பந்தமாக நானும் வாதியும் வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டோம். அதிகாரிகள் தவறு செய்து விட்டார்கள் என்று அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுத்துள்ளோமா என்றால் இல்லை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து விட்டோம்.

13. கோவிந்தசாமி எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம், அவர் திறந்து உள்ள வங்கி சேமிப்பு கணக்கு மற்றும் அரசு அடையாள ஆவணங்கள் ஆகியவற்றில் மனைவி என்று ஒன்றாம் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றும், அதனை நன்கு தெரிந்தும் வாதி எனது உறவினர் என்பதால் அவர் மட்டுமே கோவிந்தசாமியின் வாரிசு என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு)</u>

நானும் வாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. கோவிந்தசாமி 2020 ஆம் ஆண்டில் இறந்தார். கோவிந்தசாமியின் தந்தை 1979 ஆம் ஆண்டில் இறந்தார். கோவிந்தசாமியின் தாயார் பெயர் பழனியம்மாள். அவர் 2010 ஆம் ஆண்டில் இறந்தார். கோவிந்தசாமி பெயரில் உள்ள சொத்து தோட்டம் மற்றும் வீடு ஆகும். தோட்டம் கள்ளிப்பாளையம் கிராமத்திலும், வீடு ஜே.கே.ஜே காலனியிலும் உள்ளது. கோவிந்தசாமி அவரது முதல் மனைவியை சட்டப்படி விவாகரத்து செய்தாரா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.04 18:33:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.